அமைச்சர் பி.மூர்த்தி பிரமாண்ட ஏற்பாட்டில்

திருப்பரங்குன்றம் தொகுதி சார்பில் மாபெரும் ஜல்லிக்கட்டு!

அலங்காநல்லூர் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் நடைபெற்றது!

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஏற்பாட்டில் தமிழர்களின் பாரம்பரியமிக்க வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டிக்கு பெருமை சேர்க்கும் வகையில் சட்டமன்றத் தொகுதி வாரியாக அடுத்தடுத்து ஏழு ஜல்லிக்கட்டு விழா நடைபெற்று வருவதின் ஒரு பகுதியாக திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதிக்கான ஜல்லிக்கட்டுப் போட்டி அலங்காநல்லூர் கீழக்கரை கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் பிரம்மாண்டமாக நடைபெற்றது. இவ்விழாவில் மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ. மற்றும் திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய மற்றும் பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், ஜல்லிக்கட்டு காளை உரிமையாளர்கள், மாடுபிடி வீரர்கள், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர்.

தேனி தெற்கு மாவட்டம் சின்னமனூர் நகராட்சியில் தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத் தொடக்க விழா காணொளி காட்சி மூலமாக தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார். சின்னமனூர் நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. உணவு வழங்கி துவக்கி வைத்தார். உடன் நகராட்சி சேர்மன் அய்யம்மாள் ராமு, நகர செயலாளர் முத்துக்குமார், மாவட்ட துணை செயலாளர் வேப்பம்பட்டி செந்தில், நகராட்சி கமிஷனர் கோபிநாத் மற்றும் கழக முன்னோடிகள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட சரக்கல்விளை காமராஜர் தெருவில் ரூ. 2.98 கோடி மதிப்பீட்டில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணியினையும், பார்வதிபுரம் S.S. நகர் பிரதான சாலை பகுதியில் ரூ. 2.85 கோடி மதிப்பீட்டில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணியினையும், களியங்காடு சிவபுரம் பகுதியில் ரூ. 2.68 கோடி மதிப்பீட்டில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணியினையும், மேலும் ரூ. 10.00 இலட்சம் மதிப்பீட்டில் C.T.M.புரம் அரசு தொடக்கப்பள்ளியில் சீரமைப்பு பணிகள் மற்றும் ISED நகரில் புதிய பயணிகள் நிழற்குடை அமைக்கும் பணி ஆகிய பணிகளை மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தொடங்கி வைத்தார். நிகழ்வில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் ம.மேரி பிரின்ஸி லதா, கு.அகஸ்டினா கோகிலவாணி, பா.செல்வகுமார், ஜெயவிக்ரமன், ஜெனிதா, அமல செல்வன், அருள் சபிதா ரெக்ஸலின், ராஜசீலி, பிருந்தா, மு.சேக்மீரான், சதாசிவன் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி திருவேங்கடத்தில்

“தமிழ்நாடு தலைகுனியாது” மாபெரும் பரப்புரை பொதுக்கூட்டம்!

ஏ.கே.எஸ்.விஜயன் கண்டன உரை! தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.அறிக்கை!

தென்காசி, பிப்.10-

தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி சார்பில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசைக் கண்டித்து “தமிழ் நாடு தலை குனியாது” மாபெரும் பரப்புரை பொதுக்கூட்டம் நாளை (11.02.2026 புதன் கிழமை) மாலை 6 மணி அளவில் கலைஞர் திடல் திருவேங்கடத்தில் நடை பெறுகிறது.என தென் காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம். எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

இதில் கழக விவசாய அணிச் செயலாளர் தமி ழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே. எஸ்.விஜயன் பங்கேற்று கண்டன உரையாற்றுகி றார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையில் தெரி வித்திருப்பதாவது.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க,துணை முதல்வர் கழக இளைஞர் அணி செயலாளர் உதய நிதி ஸ்டாலின் அவர்க ளின் அறிவுறுத்தலின்படி “தமிழ்நாடு தலைகுனி யாது” மாபெரும் பொதுக் கூட்டம் நாளை (11.02. 2026 புதன்கிழமை) மாலை 6 மணி அளவில் கலைஞர் திடல் திருவேங் கடத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் கழக விவ சாய அணிச் செயலாளர் தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே. எஸ்.விஜயன் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.

ஆகவே மாநில, மாவட்டக் கழக நிர்வாகி கள் தலைமைச் செயற் குழு, பொதுக்குழு உறுப் பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர் வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பா ளர்கள்,

நிர்வாகிகள், ஊரக, உள்ளாட்சிப் பிரதிநிதி கள், வாக்குச்சாவடி பாக முகவர்கள் (BLA2) பூத் கமிட்டி உறுப்பினர் கள் (BLC) கழகத் தொண்டர் கள், தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். முன்ன தாக அன்று காலை 10 மணி அளவில் (11 ம் தேதி) சங்கரன்கோவில் ஸ்ரீ சீதாலட்சுமி திருமண மஹாலில் (ராஜபாளை யம் ரோடு) “தமிழ்நாடு தலைகுனியாது” கருத்த ரங்கம் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.தலை மையில் நடைபெறுகிறது. இந்நிகழ்வில் கழக விவ சாய அணி செயலாளர் தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே. எஸ்.விஜயன் பங்கேற்று வாறு அவர் அறிக்கையில் உரையாற்றுகிறார். இவ் தெரிவித்துள்ளார்.

பட்டிக்காடும் பட்டணமும்

பட்டிக்காடு : ஏன் தம்பி; நேற்று இந்தியப் பிரதமர் மோடி அவர்களுக்கு, மலேயா பிரதமர் அன்வர் இப்ராஹிம் அவர்கள் அளித்த விருந்து நிகழ்வின்போது, எம்.ஜி.ஆர். நடித்த “நாளை நமதே" திரைப்படத்தில் வரும் ‘நாளை நமதே’ பாடல் பாடப்பட்டதாமே?

பட்டணம் : **ஆமாமய்யா; நல்ல வேளை ; எம்.ஜி.ஆர். நடித்த "தாய் சொல்லைத் தட்டாதே" திரைப் படத்தில் வரும் “போயும் போயும் மனிதனுக்கிந்த புத்தியைக் கொடுத்தானே! அதில் பொய்யும் புரட்டும் திருட்டும் கலந்து பூமியைக் கெடுத்தானே!..” என்ற பாடலைப் பாடாமல் விட்டார்களே!**